**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை – அரசு மறுவாழ்வு இல்லங்கள் – தொழுநோயால் பாதிக்கப்பட்ட இல்லவாசிகளுக்கு வழங்கப்படும் சிறப்பு உணவுக்கான தொகை பெரியவர்களுக்கு ரூ.5/–லிருந்து ரூ.25/– மற்றும் சிறியவர்களுக்கு ரூ.3/–லிருந்து ரூ.20/– ஆக உயர்த்தி வழங்குதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை**

**அரசாணை (நிலை) எண்: 38**

**நாள்: 06.10.2017**
**ஹேவிளம்பி – புரட்டாசி, 20**
**திருவள்ளுவர் ஆண்டு, 2048**

**படிக்கப்பட்டது:**

1. அரசாணை (நிலை) எண்.9, மாற்றுத் திறனாளிகள் நல (மாதிந–1)த் துறை, நாள் 03.02.2015.
2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கடித ந.க. எண் 279/ம.இ.நிர்–3/2017, நாள் 04.04.2017 மற்றும் 15.06.2017.

-------

**ஆணை:**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், 10 அரசு மறுவாழ்வு இல்லங்கள் மற்றும் அரசு ஏழைகள் பராமரிப்பு இல்லம், மேல்பாக்கம், திருவள்ளூர் மாவட்டம் ஆகியவற்றில் தங்கியுள்ள இல்லவாசிகளின் உணவூட்டுச் செலவினம், நாளொன்றுக்கு பெரியவர்களுக்கு ரூ.25/–லிருந்து ரூ.42/– ஆகவும், சிறியவர்களுக்கு ரூ.21.66–லிருந்து ரூ.37/– ஆக உயர்த்தி நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள் தமிழ்நாட்டில் தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கென 10 அரசு மறுவாழ்வு இல்லங்கள் இயங்கி வருகிறது எனவும் தொழுநோயால் பாதிக்கப்பட்ட இல்லவாசிகளுக்கு உணவு, உறைவிடம், மருத்துவம் மற்றும் ஏனைய வசதிகள் அரசால் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றது எனவும், மேற்காணும் அரசாணையில் இல்லவாசிகளின் உணவூட்டுச் செலவினம் நாளொன்றுக்கு பெரியவர்களுக்கு ரூ.42/–, சிறியவர்களுக்கு ரூ.37/– என மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டு இத்தொகைக்கு மிகாமல் செலவினம் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது எனவும், கீழ்க்காணும் 5 நாட்களுக்கு சிறப்பு உணவு வழங்கப்பட்டு வருவதாகவும், சிறப்பு உணவு வழங்க பெரியவர்களுக்கு ரூ.5/–, சிறியவர்களுக்கு ரூ.3/–என ஒதுக்கீடு செய்யப்படுகிறது எனவும் தெரிவித்துள்ளார்:–

(1) சுதந்திர தினம் (ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 15)

(2) குடியரசு தினம் (ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி, 26)

(3) காந்தி ஜெயந்தி தினம் (ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர், 2)

(4) இல்ல ஆண்டு விழா

(5) காந்தி நினைவு நாள் / தொழுநோய் ஒழிப்பு தினம் (ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி, 30)

[த.பி.பா.]

3. மேலும், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் தற்போதைய விலையேற்ற நிலையில் ரூ.5/–க்கும் மற்றும் ரூ.3/–க்கும் சிறப்பு உணவாக இனிப்பு வகைகளோ அல்லது கார வகைகளோ ஏதும் வழங்கிட முடியாத நிலை உள்ளதாகவும், தொழுநோயால் பாதிக்கப்பட்ட இல்லவாசிகளுக்கு நல்ல வகையில் சிறப்பு உணவு வழங்கிட பெரியவர்களுக்கு ரூ.5/– லிருந்து ரூ.25/– (ரூபாய் இருபத்து ஐந்து மட்டும்) எனவும், சிறியவர்களுக்கு ரூ.3/–லிருந்து ரூ.20/– (ரூபாய் இருபது மட்டும்) எனவும் உயர்த்தி வழங்கும்படி கோரியுள்ளார்.

**தற்போதைய செலவின விவரம்:**

| | | | | |
|---|---|---|---|---|
| 910 பெரியவர்கள் (10 இல்லங்களில் உள்ள மொத்த இல்லவாசிகள்) | – | 910 x ரூ.5 x 5 நாட்கள் | = | ரூ. 22,750/– |
| 71 சிறியவர்கள் (10 இல்லங்களில் உள்ள மொத்த குழந்தைகள்) | – | 71 x ரூ.3 x 5 நாட்கள் | = | ரூ. 1,065/– |
| | | மொத்தம் | = | ரூ. 23,815/– |

**உயர்த்தப்பட கோரும் செலவினம்:**

| | | | | |
|---|---|---|---|---|
| பெரியவர்கள் | = | 910 x ரூ.25 x 5 நாட்கள் | = | ரூ. 1,13,750/– |
| சிறியவர்கள் | = | 71 x ரூ.20 x 5 நாட்கள் | = | ரூ. 7,100/– |
| | | மொத்தம் | = | ரூ. 1,20,850/– |

கூடுதல் செலவின விவரம்: ரூ.1,20,850 – ரூ.23,815/– =ரூ.97,035/–

4. தொழுநோயால் பாதிக்கப்பட்ட இல்லவாசிகளுக்கு மேலே பத்தி–2ல் குறிப்பிட்ட 5 நாட்களுக்கு சிறப்பு உணவு வழங்கிட பெரியவர்களுக்கு ரூ.5/–லிருந்து ரூ.25/– மற்றும் சிறியவர்களுக்கு ரூ.3/–லிருந்து ரூ.20/– என உயர்த்தி வழங்கி இச்சிறப்பு உணவு செலவினத்திற்காக ஏற்படும் கூடுதல் தொகையான ரூ.97,035/–க்கு நிதி ஒப்பளிப்பு வழங்குமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

5. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை பரிசீலனை செய்த அரசு, அதனை ஏற்று, 10 அரசு மறுவாழ்வு இல்லங்களில் உள்ள தொழுநோயால் பாதிக்கப்பட்ட இல்லவாசிகளுக்கு மேலே பத்தி–2ல் குறிப்பிட்டுள்ள 5 நாட்களுக்கு சிறப்பு உணவு வழங்கிட பெரியவர்களுக்கு ரூ.5/–லிருந்து ரூ.25/– (ரூபாய் இருபத்தைந்து மட்டும்) மற்றும் சிறியவர்களுக்கு ரூ.3/–லிருந்து ரூ.20/– (ரூபாய் இருபது மட்டும்) என உயர்த்தி அரசு ஆணையிடுகிறது.

6. மேலே பத்தி 5–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

"2235 – சமூகப் பாதுகாப்பும் நலனும் – 02 சமூக நலன்–104 முதியோர் இயலாமையுற்றோர் மற்றும் ஆதரவற்றோர் நலன் – மாநிலச் செலவினங்கள் – தொழுநோய் பிச்சைக்காரர்களுக்கான மறுவாழ்வு இல்லம் – 67 உணவளிக்கும்/உணவுச் செலவுகள்–09 ஏனையவை"

(து.தொ.கு. 2235–02–104–AI–6796).

7. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சாரா எண் 48579/நிதி(சந)/2017, நாள் 03.10.2017–ல் பெறப்பட்ட இசைவின் படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

முகமது நசிமுத்தின்
அரசு முதன்மைச் செயலாளர் (மு.கூ.பொ.)

**பெறுநர்**

மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–5.
மாநில கணக்காயர் (A&E), சென்னை–18.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–35.
நிர்வாக அலுவலர், அனைத்து அரசு மறுவாழ்வு இல்லங்கள்.
(மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)

**நகல்:**

நிதித் (சந) துறை, சென்னை–9.
முதன்மைச் செயலாளரின் முதன்மை தனிச் செயலர்,
மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, சென்னை–9.
இருப்பு கோப்பு/உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்